Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஹு (1889) ஆவணி 25உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- சுபகிருது ஹு வைகாசிமீ உசூ வெள்ளிக்கிழமை (8 June 1962) [இல-கூ]

உலகியல் அலை

## பாராளுமன்ற உறுப்பினரும்-பாடிகாவலரும்

### யாழ்ப்பாணச் சம்பவம்பற்றி சபையில் வன்மையான கண்டனம்!

மக்கள் சபை[illegible]ளார்ப் பாராளுமன்றத் தொகுதி அங்கத்தவர் வைத்தியகலாநிதி நாகநாதன் கொண்டு வந்த யாழ்ப்பாணப் பாடிகாவல் நிலையச் சம்பவம் பற்றிய குற்றச்சாட்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் யாவராலும் ஒரே குரலில் ஆமோதிக்கப்பட்டது.

ஆளுங் கட்சியினரின் உணர்ச்சி ஒருவகையிலும் உருவானதாகத் தெரியவில்லை. கட்சிபேதமின்றி எல்லாக் கட்சித் தலைவர்களும் பாராளுமன்றத்தின் மதிப்பைப் பாதுகாப்பதற்காக ஒழுங்கு முறை எடுத்தல் அவசியம் என்று உறுதியாக வேண்டிக்கொண்டனர். இவ்வளவு தூரம் இடித்து இடித்து அரசாங்கத்தின் செவியில் எடுத்துரைக்க வேண்டுமா?

உள்ளூர் ஆட்சி அமைச்சர்மீது கொண்டுவரப்பெற்ற 'நம்பிக்கையில்லை' என்ற பிரேரணை விவாதிப்பதற்கு நாள் நியமித்தல் சம்பந்தமாக எழுந்த விவாதத்தில் எதிர்பாராத விதமாக எதிர்க்கட்சியினர் எண்ணம் வெற்றிபெற்றது. இந்த நிகழ்ச்சி அமைச்சர்களின் மன நிலையைக் குழப்பிவிட்டதுபோலும்.

பாடிகாவலருக்குப் பாராளுமன்றத்தின் உறுப்பினர் மீது மனம் மாறுபட்டிருக்கின்றதா? என்ற கேள்வி பாராளுமன்றத்தில் எழுந்தது. பாடிகாவலர் படையினரைப்பற்றிக் கண்டனம் பல முறைகளிலும் மக்கள் சபையில் நிகழ்ந்தது இதற்குக் காரணமா? காலி, நுவரெலியா, தெனியாயாத் தொகுதி அங்கத்தவர்கள் பாடிகாவலர் நடைமுறைகளைப் பற்றிக் கூறியன யாவும் நல்லூர்த் தொகுதி அங்கத்தவரின் கூற்றுக்கு முற்றிலும் சான்றாக இருந்தன. விசாரணை ஆணையாளரை உடனடியாக நியமித்து, கணமும் காலம்போக்காது குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்கு அரசாங்கம் ஒழுங்கு செய்தல் அத்தியாவசியம் என்பது மக்களின் வேண்டுகோள். ——

### நற்சிந்தனை

ஐயம் புகாஅ ரறத்தைக்
கடைப்பிடிப்பார்
தெய்வமொன் றென்பார்
தெரிந்து.

உ

வடியேறு திரிசூலம் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமே லிளமதியந் தோன்றுந் தோன்றுங்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனுர்க்கே.

மைக்களமுமான்மழுவும்வரதமுடனபயமுறு
மெய்க்கரமுநாற்புயமும்விளங்குபணிக்கோடும்பூணுஞ்
செக்கருறுமதிச்சடையுஞ்சேயிழையோர்பாகமுமாய்
முக்கணிறையாங்காணமுன்னின்றேயருள்புரிந்தான்.

## ...நாகபூஷணித்தாயே!

★

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம்: ஆனந்தபைரவி, தாளம்: ஆதி

பல்லவி

என்றும எங்குவியும் என்றுக வலைதீரும்
என்றுதெ ரியேனம்மா — இராசேஸ்வரி

அநுபல்லவி

ஒன்று பலவாகிய ஓங்கா மானசத்தி
உன்றன் மலர்ப்பதத்தே னூறிக் குழைந்துபத்தி

சரணம்

அயராமல் என்குறையை அப்பனுக் குரைப்பாயே
ஐம்புல வேடர்செய்யும் அவவினை கரைப்பாயே
நயமாய்ச்சம் பந்தனுக்கு ஞானப்பால் கொடுத்தாயே
நயினை புரத்திலுறை நாகபூ ஷணித்தாயே.

## இந்துசமய பாடத் திட்டம்பற்றிய தீர்க்கதரிசனம்

காசிவாசி செந்திநாதையர் அவர்கள்
(நாவலர் அவர்களின் முதன் மாணவர்)

A என்பானுடைய வைரிகளாகிய B C D என்பார் தங்களுள்ளே தாங்கள் ஒற்றுமையிலராயவிடத்தும், அந்த A என்பானுடைய சொந்த ஆஸ்தியாகிய நிலத்தைத் தம்முடையதாக்கத் துணிந்து, அந்நிலத்திலே A என்பானுக்குரியவென்று உணர்த்தற்கு நாட்டப்பட்டிருந்த எல்லைக் கற்களைப் பிடுங்கியும், கள்ளச் சாசனங்கள் பிறப்பித்தும், அந்நிலம் அந்த A என்பானுக்குரியதாகாதவாறுசெய்தும் அந்நிலமுடையானைத் தூஷித்தும், அந்நிலத்தைத் "தம்முடைய ஆஸ்தி" "தம்முடைய ஆஸ்தி" "பொதுவாகிய ஆஸ்தி" என்று நெடுங்காலமாக எழுதியும், பேசியும் ஆண்டு வருவாராக, அதைக் கண்ட A என்பானுடைய சந்ததியாரும், பந்துக்களும், சிநேகரும், அந்த B C D என்பாருடைய வமிசத்தாரும், அவரைக் கதாநுகத நியாயமாகத் தொடர்ந்து நிற்பாரும் அந்நிலம் A என்பானுடையதன்று, B C D என்பார்க்குப் பொதுவாகிய ஆஸ்தி போலுமென்று நம்பியும் சொல்லியும் எழுதியும்வந்த காலத்தில், அந்த A என்பவன் சந்ததியார்மேற் பற்றுடையா ரொருவனுக்குச் சிற்சில அறிகுறிகளால் அந்நிலம் A என்பானுக்குரியதென உண்மை புலப்பட்டவிடத்து, B C D என்பார் இன்ன இன்னவாறு மோசஞ் செய்து அந்த A என்பானுடைய நிலத்தைக் கவர்ந்து கொண்டார் என்றும் A என்பவனுடைய ஆஸ்தி என்றமைக்குப் பிரமாண சாசனம் இன்னது இன்னது என்றும் காட்டி, அந்த A என்பானுக்கே அந்நிலமுரியதென்று நீதிஸ்தலம் வாயிலாகத் திருட்டிகாரஞ் செய்து காட்டிவிட்டாற்போல, ஈசகேநாதி உபநிடதங்களும் பிரமசூத்திரங்களும் வைதிக சைவருடைய சொந்த ஆஸ்தியேயாக, அவ்வாஸ்திக்குரியராய், அதைப் பராமரித்தற்குப் பூரண அதிகாரிகளாயுற்ற "முப்பொழுதுந் திருமேனிதீண்டுவார்" எனப்படும் ஆதிசைவப் பிராமணர் திருமேனி தீண்டுதலிலே தங்கால முழுமையும் போக்கிப் பராக்காய் இருந்தாராக, மகாசைவருள்ளும் பெரும்பான்மையும் படித்தவர் இலாது அரியராய்விட, அவ்வாய்ப்பாகிய சமயமுணர்ந்த ஏகான்மவாதாசாரியரும்; வைணவாசாரியரும், மத்துவாசாரியருமாகிய மூவரும் அவ்வுபநிடத பிரமசூத்திர ஆஸ்தி வைதிக சைவர்க்குரியதன்றென்று அவ்வாஸ்திக்குரியராகிய ஆதிசைவரை அலட்சியஞ்செய்தும், பிரமகீதை முதலிய கள்ளச்சாசனங்கள் பிறப்பித்தும், உபநிடதம் பிரமசூத்திரம் என்பன "தம்முடைய" "தம்முடைய" என்றும், "பொது உபநிடதம்" என்றும் காட்டியும், நாட்டியும், எழுதியும், பேசியும், பிரசங்கித்தும் வந்தாராக, அதைக் கண்ட ஆதிசைவரது வமிசத்தாரும் சிவன்மேற் பற்றுடைய பிறரும், அவர்கள் கூறுவது மெய்போலுமென்று மனவருத்தத்தோடு தம்மீது ஏற்றுந் தூற்றுதல்களையுஞ் சகித்துக்கொண்டு வந்தகாலத்தில், திருவருள் உணர்த்தினமையினாற்போலும் ஏகான்மவாதாசாரியர் முதலாயினோர் உபநிடதங்களுக்கும் பிரம சூத்திரங்களுக்கும் உரைதத உரைகள் ஒவ்வொன்றும், அவ்வுபநிடத சூத்திராதிகளுக்குப் பொருளாக ஸ்ரீ. நீலகண்ட சிவாசாரியரும், ஸ்ரீ அரதத்தாசாரியரும், ஸ்ரீ. அப்பய தீக்ஷிதரும், ஸ்ரீ. வேதவியாசரும், சிவபெருமானும் முறையே அருளிய பிரம சூத்திர பாடியங்களும்,

சதுர்வேததாற்பரிய சங்கிரகமும், சிவார்க்க மணி தீபிகையும், சிவபுராணங்களும், சிவாகமங்களும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர், திருநாவுக்கரசு நாயனர், ஸ்ரீ சுந்தரமூர்த்திநாயனர், ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளாகிய வைதிக சைவ சமயஸ்தாபனசாரியர்களும், (மெய்கண்டார் முதலிய சந்தானசாரியர்களும்) அருளிய திராவிட வேத (சித்தாந்த) சாத்திரங்களும் பிரமாணமாம் என்றும், அதனால் அவ்வுபநிடத பிரம சூத்திரம் வைதிக சைவர்களுடைய சொந்த ஆஸ்தியாமென்றும் எமது "சிவாத்துவித சைவபாடியத் தமிழ்மொழி பெயர்ப்பு"க்கு முதற் கண்ணே வலிய பெரிய கோபுரமாய் நின்ற உபநிடத வுபக்கிரமணிகை பிரமசூத்திர வுபக்கிரமணிகைகளில் விரித்து உலகினர் நீதிஸ்தலத்திலே திருட்டிகாரஞ்செய்து நிரூபித்திருக்கின்றேம். ஆண்டுக் காண்க.

குறிப்பு:-

வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்த தத்துப்பட வினுவிடை 39-ம், 40-ம் பக்கம்.

A என்பானின் பேய்ச் சந்ததிதான் நடைமுறையிலிருக்கும் இந்துசமய பாடத் திட்டத்தின் 2-ம் பகுதி- A என்பானின் வைரிகளுள் முதற்றர வைரி B அஃதாவது ஏகான்மவாதம். அது தான் பாடத்திட்டத்தின் 3-ம் பகுதி. அப்பகுதியிற் குறிப்பிட்ட உபநிடதம் பிரம சூத்திரம் முதலிய சொத்துக்கள் A என்பானின் சந்ததிக்குரிய சொத்துக்கள்.

A என்பானின் சந்ததிகளாகிய இந்துசமய பாடத் திட்டத்தின் இரண்டாம் பகுதிக்குரியவர்களே, எழுமின்! விழிமின்! உங்கள் ஆஸ்தியை இழக்கப் போகிறீர்களா? என்ன?

சி. கணபதிப்பிள்ளை,
பண்டிதர்.

கலாசாலைவீதி,
திருநெல்வேலி, 5-6-62.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சுபகிருது ஸு வைகாசி மீ
உசூ உ வெள்ளிக்கிழமை

## பாடிகாவற் பண்பு

—0—

அரசாங்கத்தை விழுத்தும் நோக்கமாகச் சதி செய்தார்கள் என்று பாடிகாவலர் தலைமை அதிகாரிகளும் படைப் பகுதி அதிபர்களும் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் வேளையிற் பொதுமக்களுக்கும் பாடிகாவலர் இடையூறு விளைவிக்கின்றனர் என்று பழி சுமத்தப்படுவது இந் நாட்டுக்கு மட்டுமன்று பாடிகாவலர் என்ற கடமையைப் பூண்டிருக்கும் அனைவருக்குமே கவலையைக் கொடுக்கின்ற நிலைமையை உண்டு பண்ணுகின்றது. பாடிகாவலர் மீது கொண்டுவரப்பட்ட குற்றங்களை மேலதிகாரிகள் முறைப்படி விசாரித்து முடிவு கூறுமுன் யாம் இந் நிலைமையைப் பற்றிக் கருத்துரைத்தல் முடியாதெனினும் பாடிகாவலர் என்ற பணியின் பண்பு எத்தகையதாயிருத்தல்வேண்டுமென்று மட்டும் எடுத்துரைத்தல் அவசியமாகின்றது.


நாடு என்ருல் மக்களும் மக்கள் அமைத்த அரசும், அரசுநிறுவிய ஆட்சி ஒழுங்கும் எனப் பொருள்படும். ஆகவே நாட்டின் சீரும் நலமும் திறமையும் மக்களிலும் அரசிலும் ஆட்சி ஒழுங்கிலும் தங்கியிருக்கின்றன. இம்மூவகை அமைப்பில் எள்ளளவு குறைகுற்றங் காணப்படினும் நாட்டின் சிறப்புக் குன்றும். குற்றங்கள் கண்டிக்கப்படாமற் கூடுதலாகப் பெருக விடப்பெறின் நாடுகேடுறும். தேச நலத்தின் பொறுப்புடையவர் யாவரும் தங்கள் பணியைப்பண்புடன் ஆற்ற வேண்டியவர்கள் ஆவர்.

பாடிகாவற்பணியோ மக்களைப் பாதுகாத்தும் அரசுக்கு அரணுக விருந்தும் ஆட்சி ஒழுங்கை நீதிநெறி தவருது நிகழ்த்தும் பான்மையதா யிருத்தல் வேண்டும். வேலி பயிருக்கே தீங்கு விளைவிப்ப தாகுமேயானுற் காவல் என்ற கடமை இருக்க வேண்டியதில்லையே. ஆயுதங்களை அணியாகக் கொண்டு பாடிகாவலர்பணி ஆற்றும் முறை அப்பணியாளரின் பாதுகாப்புக்கன்றிப் பொதுமக்களைத் தாக்கித் தண்டனை விதித்தற்கு இடங்கொடுப்பதாகக் கருதப்படக் கூடாது,

இந்நாட்டின் பலவேறு இடங்களிலிருந்து பாடிகாவலர் மீது கொண்டுவரப்பட்ட குற்றச் சாட்டுகளை ஆட்சியாளர் காலந் தாழ்த்தாது விசாரணை செய்து மக்கள் மனக் கவலையை நீக்கிபாடிகாவலர்பணியின் பண்பை நிலை நாட்டுதல் அத்தியாவசியம். யாழ்ப்பாண நகரப் பாடிகாவல் நிலயத்தில் நல்லூர்த்தொகுதிப் பாராளுமன்றத்து அங்கத்தவர் தாக்கப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டு விசாரணை முடிவு பொது நிலைமையைச் சீர்ப்படுத்துமென்று நம்புகின்றேம்.

—

உ



## கந்தபுராணவுரை வெளியீடு

திருவருளை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார், கந்தபுராணம் முழுவதற்கும் இப்பொழுது பெறக்கூடிய உரைகளைப் பெற்றும், உரையில்லாத பாகங்களுக்கு உரையெழுதுவித்தும் — சபையார் நியமித்துள்ள உரைக்குழுவிடம் சமர்ப்பித்து அவர்கள் அவற்றைப் பரிசீலனை செய்தபின், மேற்படி உரைகளைச் சஞ்சிகை சஞ்சிகையாக அச்சிட்டு வெளியிடத் தீர்மானித்துள்ளார்கள். இத் தீர்மானத்தை நிறைவேற்ற உதவியாக, யாழ்ப்பாணம் வித்துவ சிரோன்மணி ந. ச. பொன்னம்பலம்பிள்ளை அவர்களிடம் கல்விகற்ற மாணவர்கள் குறித்து வைத்திருக்கும் கந்தபுராணவுரைக் குறிப்புக்களையும், வேறு அறிஞர்கள் எழுதிய உரைகளையும் எமக்கு அனுப்பி வைத்தால் அவர்களுடைய உரைகளையும் எமது உரைப் பிரசுரத்தில் சேர்க்கக்கூடியதாகவிருக்கும், அங்ஙனம் அன்பர்கள் அனுப்பும் உரைக் குறிப்புகள் உரியவர்களுக்குக் கவனமாகத் திருப்பிக் கொடுக்கப்படும்.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம் 5-6-62,

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

நேயர்கள் நெஞ்சம்

## ஜீ. சி. இ.
## இந்து சமயப் பாடத்திட்டம்

————o————

வித்தியாசாலைகளில் மாணவர்களாயினேர் யாவரும் கருவிநூற் கல்வியோடு சமய நூற் பயிற்சியும்பெற்றுக்கொள்ள வேண்டியது ஆவசியகம் என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். அச்சமய போதனையும் பிள்ளைகள் அனுசரிக்கும் சமயத்தைப்பற்றியதாகவே யிருத்தல் வேண்டும். அதுவன்றி அம்மாணவர் அனுசரியாத சமயத்தைப் படிப்பிக்க முற்படுவது முறையாகாது. அது ஆபத்தாகவே முடியும்.

இலங்கையிற் படிக்கும் இந்து மாணவர்களுள் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது விகிதமானேர் சைவ மாணவரே. வைணவம் சாக்தம் முதலிய சமயக் கொள்கைகளை அனுசரிக்கும் மாணவர்கள் இந் நாட்டில் உளரோ என்பது சந்தேகம்.

சைவ மாணவர் படிக்க வேண்டிய நூல்கள் வேதாகமங்களைத்தழுவி நாவலரவர்கள் எழுதிய சைவ வினுவிடை, நான்காம் பாலபாடம் முதலிய நூல்களும், அவைபோன்ற நூல்களும் மெய்கண்ட சாஸ்திரங்களும் தேவார திருவாசகம் முதலியனவுமேயாம். அவை தாமும் படிமுறையானே கற்பிக்கப்பட வேண்டியது அவசியம்.

இப்பொழுது நடைமுறையிலிருக்கும் கல்விப்பொதுத் தராதர பத்திர பரீட்சைக்குரிய சமயபாடத் திட்டம். சைவசமயப் பிள்ளைகளுக்குரிய பாடத்திட்டமாய்க் காணப்படவில்லை. சைவ சமயக்குருத்துவத்திற் சிறந்தோர் — பண்டிதர்கள் — சைவப்புலவர்களுக்குத் தானும் கடினமாயுள்ள விஷயங்களை, சைவசமயப் பிரமாண நூல்களிவை சைவசமய சின்னங்களிவை சமயாசாரியர்களிவர் என்றின்னேரன்ன விஷயங்களையேனும் அறியாத பாலிய மாணவரிடையே திணிப்பதாக நடைமுறையிலிருக்கும் பாடத் திட்டம் அமைந்திருக்கிறது.

சமயநூற் கல்வியில் ஆரம்ப நிலையிலிருக்கும் மாணவர்கள் சாக்தம் வைஷ்ணவம் முதலாம் சமயக் கொள்கைகளையும் அறிந்திருக்க வேண்டுமென்று வற்புறுத்துவதிலும், வேதங்கள் சங்கிதைகள் ஆகமங்கள் முதலியவற்றின் பொருளியல்புகளை அறிந்திருக்க வேண்டுமென்று திட்டமிடுதலிலும் யாதோர் பொருளையுங் காணேம். இத்திட்டத்திலுள்ள சங்கிதைகள் உபநிடதங்கள் என்றெல்லாம் வரும் விஷயங்களைப் படிப்பிக்கும் ஆசிரியர்களும் பரீட்சிப்பவரும் உளரோ என்பது ஆராயத்தக்கது. படிப்பிக்கினும் பிள்ளைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள காலவெல்லை போதியதானேஎன்பதும் சந்தேகத்துக்கிடமாயுள்ளது. இப்பாடத்திட்டத்தில் சைவப்பிள்ளைகள் அறியவேண்டியசித்தாந்தநூற்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இத்திட்டத்திலுள்ள சைவக்கிரியைகள். விரதங்கள் முதலிய சில பகுதிகள் வரையறையின்றிப் பெருகிக்கொண்டு போகிறது. அதனுல் வரும் இடர்ப்பாடுகளும் பல, ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆசிரியர்களாயுள்ளோர்களே படிக்க வேண்டியதாய்ப் பரந்திருக்கும் விஷயங்களை மாணவரிடையே புகுத்துவதற்கு முற்பட்டது தவருகும். இப்பாடத்திட்டத்தின்படி எழுதப்பெற்ற சில பாடநூல்களும் ஒன்றேடொன்று மாறுபட்டு மாணவரைத் தவருன வழியிற் செலுத்துவதற்கு உதவியளிக்கிறது.

இந்தப் பாடத் திட்டம் தேவையற்றதெனச் சலிப்படைந்திருக்கும் ஆசிரியர்களையும் படிக்க முடியாத அத்துணைக் கடினமானதெனச் சோர்வடைந்திருக்கும் மாணவர்களையும் நாமறிவோம். சைவப்பிள்ளைகள் சாக்தம் முதலிய புறச்சமய நூல்களைப் படிக்க வேண்டுமென்று வற்புறுத்துவது பௌத்த சமயப் பிள்ளைகளைக் கிறிஸ்து சமயம் படிக்கவேண்டுமென்று வற்புறுத்துவதுபோலிருக்கிறது. புறச்சமய நூலாராய்ச்சி சைவருக்குக் கூடாதென்று சொல்பவரில்லை. அந்நிய மதநூல்களைக் கற்பதற்கு அவர்களுக்கு இது தக்க பருவம் அல்லவென்பதே நாம் எடுத்துக்கூறுவது.

இவ்வாருன குறைபாடுகள் இத்திட்டத்தில் இருப்பது கண்டே புதிய பாடத் திட்டம் சைவ ஆசிரியர் சங்க நிர்வாக சபையினரால் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தை ஜீ. சி. ஈ. மாணவர்களுக்கு ஏற்றதாய்ச் சிறந்த முறையில் அமைத்த சைவாசிரியர்கள் என்றும் பாராட்டப்படத் தக்கவராகின்றனர்.

இத்திட்டத்தினைக் கல்விப் பகுதியினர் அங்கீகரிப்பதனுல் சைவமாணவர்களுக்கு மிகப் பெரிய நன்மையுண்டாகும் என்பதனை நாம் வற்புறுத்திக் கூறுகின்றேம.

ச. குமாரசுவாமிக்குருக்கள்,
அதிபர்.
1. சிவானந்த குருகுலம்,
2. வேத சிவாகமக்கல்லூரி,
திருக்கேதீச்சரம்,

# சேதுப்பிள்ளை நினைவுக் கட்டுரைப் போட்டி

————0————

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் ஆராய்ச்சித் துறைத்தலைவராகப் பணியாற்றியவரும் இலக்கிய ஆற்றல் கருதி கலாநிதிப் பட்டம் அளிக்கப்பெற்றவருமான பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளையவர்களின் நினைவாகக் கட்டுரைப்போட்டி ஒன்று நடைபெற இருக்கிறது,

கட்டுரைக்குரிய பொருள் :

1. சேதுப்பிள்ளையின் தமிழ்த்தொண்டு. (பேச்சு, எழுத்து, ஆராய்ச்சி)

அல்லது,

2. சேதுப்பிள்ளையின் பின்வரும் நூல்களுள் ஒன்றைப்பற்றிய விமர்சனம்.

(அ) வேலும் வில்லும், (ஆ) அலையும் கலையும், (இ) தமிழ் விருந்து (ஈ) தமிழின்பம்.

மாணவர்க்கு ஒரு பிரிவும் மற்றையோர்க்கு இன்னெரு பிரிவுமாக இரண்டு பிரிவுகளாகப் போட்டிக்கட்டுரைகள் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் இருவருக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

(foolscap) தாளில் ஐந்து பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் ஓர் ஆசிரியரின் சான்றுக்கடிதமும் இணைத்தனுப்பல் வேண்டும்.

18-7-62 இற்கிடையில், "போட்டி ஆசிரியர்",
பேராசிரியர் சேதுப்பிள்ளை நினைவுக் கட்டுரைப்போட்டி,
"இந்துசாதனம" வண[redacted]ன, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்திற்குக் கட்டுரைகள் அனுப்பி வைக்கவும்.

## தமிழ்ப் பணிக்கு வாழ்த்து

( ஸ்ரீ கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை )

எண்பதாண் டிவ்வுலகில் இன்பவாழ் வெய்திவகல்
நண்பனும் ரத்னேச நாற்கவிஞ — திண்ணமாய்
நூருண்டு வாழ்க! நுகர்தற் கரியபெரும்
பேரும் அனைத்தும் பெற்று.

X X X

உணர்ச்சி நட்பால், உள்ளத் துறைந்துள்ள தமிழ்ப்புலவர், பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர் அவர்கள் சைவத்தையும தமிழையும் இருகண் மணிபோல் கருதிக் காத்துப் பணிகள்பலபுரிந்துள்ளார்கள்.

அன்னுர், இன்னும் பல்லாண்டிருந்து, மேலும் பண்பட்ட பல சிவப்பணிகள் ஆற்ற, திடகாத்திர தேகத்தையும் தீர்க்காயுளையும் உவந்தளித்து அருள்பாலிப்பானுக.

வாழ்க வ. மு. இ. ஐயர்!

குன்றக்குடி அடிகள்.

X X X

[redacted]

... ... ... அவர்கள் உடல் நலம் குன்றி வருகிறது. அவர்களுக்கு, இடம், பொருள், ஏவல் வசதிகளை அமைத்து அவரைப்பொன்னைப்போல் போற்றுவோமாக.

செ. முத்துத்தம்பி

இன்னலின் வருகைகள் நீ இறைவன்பால் வைத்திருக்கும் நன்னம்பிக்கையின் ஆழத்தைச் சோதிக்கும நிகழ்ச்சிகளாகும். —சுவமி சிவானந்தா.

# நல்லைநகர் விநாயகர் பதிகம்

[நவாலியூர் ஸ்ரீ க. சோமசுந்தரப்புலவர் அவர்கள் பாடியது]

காப்பு
பிள்ளையார்

பேறுதரு நல்லைப் பெருநகரில் வாழொருமுக்
கூறுதரு பொன்மேனிக் கோமானே — ஆறு
குணபதியே யுன்மீது கூறுதமிழ் மூற்றக்
கணபதியே முன்னின்று கா.


குரு, நாமகள்

முப்பொருளின் றன்மை முழுது மெனக்குணர்த்துஞ்
சுப்பிரமண் யப்பெருமான் றாயபத — மெப்பொழுதும்
போற்றியருட் பாரதிதன் பொன்னஞ் சலசபதஞ்
சாற்றவரு நல்ல தமிழ்.

நூல்

பொன்னெழுகு கொன்றையுங் கூவிளமு மத்தமும்
புதுநிலவொ மூக்குபிறையும்
பொங்கிவரு கங்கையுந் தங்கிவளர் செஞ்சடைப்
புண்ணியனெ ருத்தலாக
மின்னெழுகு நுண்ணிடைக் கன்னியொரு பிடியாக
மெய்ஞ்ஞான லீலைபுரியும்
வேளைதனில் மூக்கண்ணு நால்வாயு மிருசெவியும்
மேவுமத வேழமுகமும்
மன்னெழுகு மீரிரு மலர்க்கரமு நவரத்ன மணிமார்பு
மகனெருந்தியும்
வனசமல ரடியுமா யருண்மேனி கொண்டெம்மை
வாழ்விக்க வந்தகுமரா
தேன்னெழுகு தமிழ்மொழியி னுன்னைநா னேதவருள்
செய்குவாய் நல்லைநகர்வாழ்
சிக்கற வினைப்பவர்கள் விக்கின மனைத்துமழி
சிற்பர முதற்கடவுளே.

—தொடரும்.




# பெரிய புராணம் என் இயற்றப்பட்டது

## சேக்கிழார் நாயனர் விழாவில் தலைவர் விளக்கம்

சென்ற புதன்கிழமை (6-6-62)யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சேக்கிழார் நாயனர் குருபூசை வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

காலை 9-30 மணி முதல் சிவபூசை மண்டபத்தில் சிவபூசையும், நாவலர் மண்டபத்தில் கடவுளாராதனையும், புராணபடனமும், மகேசுர பூசையும் நடைபெற்றன.

அன்றிரவு பண்டிதர் பிரமஸ்ரீ. வ. மு. இரத்தினேஸ்வர ஐயர் அவர்கள் தலைமையில் சொற்பொழிவுகள் நடைபெற்றன. தலைவர் தமது தலைமை உரையில் பெரிய புராணம் இயற்றப்பெற்ற காரணத்தைக் கூறினர், "அநபாய சோழமன்னன் சமண நூலாகிய சீவகசிந்தாமணியைப் பெரிதும் விரும்பிப் படித்தது கண்டு, சைவ ஒழுக்கங்களிலும், கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கிய அரசனது முதன் மந்திரியாகிய அருண்மொழித்தேவர் அரசனிடம் இது "தவகதை அல்ல அவகதை" என்று கூறி, அரசனும் மற்றும் உள்ள சைவப்பெருமக்களும் படித்து இன்புற்று ஈடேறும் பொருட்டு அடியார் பெருமைகளைக் கூறும் புராணமாகப் பெரிய புராணத்தைக் காப்பியச் சுவைகளுடன் இனிது பாடியருளினர்."

அடுத்ததாகப் "பெரிய புராணம்" என்னும் தலைப்பில் பண்டிதர் திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்கள் ஓர் சிறந்த சொற்பெருக் காற்றினர்கள். அவர் பேசியதாவது, சைவ சமய ஆசாரங்கள் ஒழுக்கங்கள் குன்றிவரும் இக்காலத்தில் பெரிய புராணத்தை மக்கள் முறையாகப் படித்து வந்தால் அவர்கள் நல்வழி அடைதற்குத் துணையாக இருக்கும். உலகிலேயே அடியார் பெருமையே சிறந்தது. அருவாக இருக்கின்ற இறைவனைச் சிவனடியார் வழிபாட்டினுல் எவ்வாறு அடைய முடியும் என்பதைப் பெரியபுராணம் நன்கு புலப்படுத்துகின்றது. சுந்தரமூர்த்திநாயனுரால் இயற்றப்பெற்ற "திருத்தொண்டத்தொகை"யை முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பி அவர்களின் "திருத்தொண்டர் திருவந்தாதி"யை வழி நூலாகவும் கொண்டு சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தை பக்திச்சுவை சொட்டச் சொட்டப் பாடியருளினர். இதனுலேயே இவரைப் "பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப்பாடியகவிவல்லவ" என்று அறிஞர் புகழ்கின்றனர். சைவ நீதி, சைவ ஒழுக்கம் இவைகளைப்பற்றி விரித்துக் கூறினர். இயற்கை வர்ணனைகளில் கூட உயர்ந்த கருத்துக்கள் செறிந்திருப்பதைச் சுட்டிக்காட்டினர்.

அடுத்ததாகச் சித்தாந்த அறிஞரும், தமிழ் வைத்தியருமாகிய திரு. வே. சோமசுந்தரம் அவர்கள் பேசுகையில், சேக்கிழார் புராணத்தை இயற்றிய தில்லைவாழ் அந்தணருள் ஒருவராகிய உமாபதி சிவாச்சாரியார், அதில் "தாணுவாகிய புராணம்" என்ற சொற்றொடரை விளக்கும்பொழுது பெரிய புராணத்தின் பெருமையைக்கூறி விளக்கினர், தாணு என்பது சிவலிங்கத்தைக் குறிக்கும். பெரிய புராணம் சிவலிங்க வடிவமே என்றும் கூறினர்.

அடுத்து அராலி திரு. வே. கந்தையா அவர்களும் தமது கருத்துக்களைத் தெரிவித்தார். பெரியபுராணகால அடியார்களின் சமயவாழ்க்கையையும் இக்காலச் சமய வாழ்க்கை முறைகளையும் எடுத்துக்கூறி சைவ ஒழுக்கம் குன்றி வருதலை வருத்தத்துடன் தெரிவித்தார். நம்மிடையே சைவப் பற்று மிகுந்து இருத்தல் வேண்டும், பேச்சு, மூச்சு, இவைகளில் சைவ மணம் கமழ வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டார்.

தலைவர் முடிவுரையின் பின்னர் கூட்டம் தேவாரத்துடன் இனிது நிறைவெய்தியது.

## இலவச சமயதீட்சை

கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலயத்தில் 21-ந்உ (3-6-62) ஞாயிற்றுக்கிழமை மேற்படி ஆலயத் தொண்டர் சபைத்தலைவர் செல்வன் முத்தையா தியாகராசா தலைமையில் பிரம்மஸ்ரீ. இ. சி. கெங்காதரக்குருக்கள் அவர்களால் சுமார் 110 நபர்களுக்கு இலவச தீட்சை அளிக்கப்பட்டது.

அகில இலங்கைப் பொது ஜன சேவைச்சங்கச்சமயப்பிரசார சபையால் இலவசமாக நித்திய கருமவிதிப் புத்தகம் 50தீட்சை கேட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

## மேற்பிரிவில் முதற் பரிசு பெற்றுர்

கண்டியிற் சமீபத்தில் நடைபெற்ற தெய்வீக வாழ்க்கைச் சங்க வெள்ளி விழாவில், யாழ்ப்பாண மத்தியகல்லூரி மாணவர் ஆர். ஏ. ஜெகதீசன், பேச்சுப்போட்டியில் (மேற்பிரிவு) முதற் பரிசுபெற்றுர்.

## இளைஞர் இயக்கம்

கொழும்பு இந்துவாலிபர் சங்க செயற்குழுக் கூட்டம் கொழும்புவிவேகானந்தசபை மண்டபத்தில் சபைத்துணைத் தலைவர் திரு. ச. சுப்பையா அவர்களின் தலைமையில் (3-6-62) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் எதிர்வரும் மாணிக்கவாசகர் குருபூசைத் தினத்தைச் சிறப்புடன் கொண்டாடுவதெனவும், சங்க வளர்ச்சி கருதி சைவ இளைஞர்களை சங்க உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு ஒவ்வொரு நிர்வாகத் தொண்டர்களும் ஊக்கத்துடன் தொண்டாற்ற முன்வரவேண்டுமெனவும் தலைவர் வேண்டிக் கொண்டதுடன் இளைஞர்களின் சமய அறிவு வளர்ச்சி கருதியும் ஏழைமக்களும் சமய அறிவைப்பெறும் வண்ணம் 143 கியூவீதி, கொழும்பு 2ல் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்துவாலிபர் சங்கத்தின் நூல் நிலையத்தைநல்ல முறையில் நடாத்திவரவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாரம் (3-6-62 — 9-6-62)

# உங்கள் பலன்?

[ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

புதுமுயற்சிகள் தொடர்ந்து திருப்திகரமாயிருந்து வரும். பண இலாபமும் நிச்சயம். போட்டி போடுவோரை உம்மால் வெற்றி கொள்ளமுடியும். வார இறுதி நாள் கலகம்நிறைந்ததாயிருக்கும்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,**

தொழில் விவகாரங்களைப் பொறுத்தமட்டில் இவ்வாரமும் ஏற்றதாகவே இருக்கும். ஆனுல் மன அமைதி இருக்காது. உறவினருடன் சச்சரவுக்கிடமுண்டு. அவதூறு பேசுவோர் பற்றி எச்சரிக்கையாக நடந்துகொள்க.

**மிதுனராசி மிருகசீரிடம், 2 4,3, திருவாதிரை, புனர்பூசம் 1, 3 4ம் பாதம்.**

தடைகளைத் தாண்டிவிடவும் உமது எண்ணப்படி எந்த விஷயத்திலும் நடந்து கொள்ளவும் உம்மால் முடியும். பண இலாபம் நிச்சயம். கல்வித்துறையில் முன்னேற்றம் ஏற்படும். ஆனுல் உறவினர் மூலமான தொல்லைகள் சில உண்டாகும்.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.**

உடல்நிலை திருப்திகரமாயிருக்காது. வீட்டவர்கள் ஏதாவது சுகவீனத்தால் பாதிக்கப்படுவர். ஆனுல் தொழிலளவில் ஓரளவு வெற்றிகரமான வாரம்.

**சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.**

செல்வாக்குள்ளவர்களின் நட்புக் கிடைக்கப்பெறுவீர். பண இலாபமும் நிச்சயம். ஆனுல் உடல் நிலைக் கோளாறும் சிறு விபத்தும் உண்டாகக்கூடும்.

**கன்னிராசி உத்தரம் 2, 3, 4ப் பாதம் அத்தம் சித்திரை 1, 2ப் பாதம்.**

நண்பர்கள் உறவினருடன் தப்பான எண்ணங்களுக்கும் இடமுண்டு. மனக்கவலைகளுக்கும் சுகவீனத்திற்கும் தடையில்லை. உமது ஒவ்வொரு பொறுப்பிலும் நீர் அக்கறையோடு இருக்கவேண்டும்.

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

தொழில்துறையில்திருப்திகரமாயிருககிற அதேவேளையில் குடும்ப நிலைமை பெரும் தொல்லை தரும். சச்சரவுகளும் தப்பெண்ணங்களும் உண்டாம், உடல் நிலையும் பாதிக்கப்படும், வயிற்றுக்கோளாறுகளுக்கு இடமுண்டு,

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

பெரும் முயற்சியில்லாமலே உமது சாதனைகளில் வெற்றி பெறுவீர் எதிர்ப்புக் கரைந்தோடிவிடும். ஆனுல் உடல்நிலை திருப்திகரமா யிருக்காது.

**தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.**

குடும்ப விவகாரத்தில் சற்று முன்னேற்றம் ஏற்படும். பெருமுயற்சியின் பின் உமது சாதனைகளில் வெற்றி பெறுவீர். உடல்நிலை இன்னும் திருப்தியற்றதாகவே இருக்கும்.

**மகராசி உத்தராடம் 2, 3, 4ப பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,**

உமது பொறுப்புகளில் சில எதிர்ப்புக்கள் ஏற்படும். ஆனுல் அவற்றை வெற்றிகொள்ள உம்மால் முடியும். வார முதல்நாளை எச்சரிக்கையோடு கழிக்கவும். இவ்வாரமும் பணமளவில் சாதகமானதாயிருக்கும். ஆனுல் உடல் நிலைக் கோளாறு உண்டாம்,

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

குடும்ப சம்பந்தமான கவலைகளுக்கு இடமுண்டு. திங்கள் செவ்வாயும் புதன் காலையும் எச்சரிக்கையோடு கழிக்கப்படவேண்டும். மிகுதி வாரம் தொழில் விவகாரங்களுக்கு ஏற்றது.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

நிலபுலங்களால் இலாபம் நிச்சயம், செல்வாக்குள்ள நண்பர்கள் உம்மை இக்கட்டிலிருந்து காப்பாற்றுவார். ஆனுல் உடல்நிலை தொடர்ந்து திருப்தியற்றதாகவே இருந்து வரும். புதன் மாலையையும் வியாழன் வெள்ளியையும் எச்சரிக்கையோடு கழிக்கவும்.

யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 1[illegible]

## கருத்துக் கலசம்

நாம் நமக்கென மட்டும் வாழாது பிறருக்காகவும் வாழ வேண்டியவர்கள் என்பதை உணர்ந்து நம் வாழ்வைப் பிறருக்குப் பயனுள்ளதாகவும் ஆக்கிக் கொள்ள வேண்டும்.

—திருமதி சாலை இளந்திரையன்

x x x

வையகமெல்லாம் வள்ளுவன் குறள் பரவிவிட்டது. ஆனல் அது பிறந்த தமிழினத் தவரிடையே மட்டும் வள்ளுவம் பரவவில்லை என்பதைத் தமிழர்களின் வாழ்க்கைச் சீர்கேடே காட்டிக்கொண்டிருக்கிறது.

— சாலை இளந்திரையன்.

x x x

கலை வளர்ச்சிக்கும் பண்பாட்டு முன்னேற்றத்திற்கும் குருபக்தி அவசியம்.

—கலையரசு

x x x

(ஈழத்) தமிழர்கள் இன்றைய நிலையைப் போக்க பொருளாதார அபிவிருத்தி காணவேண்டியது அவசியம்

* * *

தமிழ்மக்களுக்கே முன்னோடிகளாக இருக்கக்கூடிய சிறந்த அறிவாற்றல் வாய்ந்த தமிழர்கள் வெளி நாடுகள் சென்று குடியேறுவதைநிறுத்திக்கொள்ள வேண்டும்.

— தர்மலிங்கம்

x x x

நாட்டின் பொருளாதாரத் திறதுப் பாடுபட்டுவரும் ஒரு பகுதியினரின் வேலை வசதிகளை இன்னெரு பகுதியினருக்குப் பறித்துக்கொடுப்பது நீதியும் நேர்மையும் ஆகாது.

—ஜனுப் அஸிஸ்.

x x x

சுதந்திரப் பாதையிலே செல்ல நினைப்பவர், பசி பட்டினி சிறைச்சாலை தூக்கு மேடை ஆகியவற்றை எதிர் நோக்கியே ஆகவேண்டும்.

—அமிர்தலிங்கம்,

### கரவெட்டியில் அரசியல், பொருளாதார இலக்கிய மகாநாடு

கரவெட்டி வாணி கலைக்கழகத்தினரால் இம்மாதம் 18, 19, 20-ம் திகதிகளில் நடத்தப்படவிருக்கும் அரசியல் பொருளாதார, இலக்கிய மகாநாட்டில் கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன், மு. சிவசிதம்பரம் உடுப்பிட்டி பா.உ. வித்துவான் சிங்காரவேலனர் ஆகியோர் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

### காங்கேசன் துறையில் பர்மாக்கப்பல்

—0—

ஆயிரம் மூடை அரிசியுடன் பர்மாக்கப்பல் ஒன்று காங்கேசன் துறைக்கு வந்துள்ளது. அரிசி இறக்குமதி நடைபெற்று வருகிறது.

### நாயன்மார்கட்டு மகேசுவரி வித்தியாசாலையில் சுகாதாரவாரம்

யாழ். நாயன்மார்கட்டு மகேசுவரி வித்தியாசாலை மண்டபத்தில் சுகாதாரவாரம் 7-6-62 வியாழக்கிழமை பிற்பகலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது ஆரோக்கிய வாழ்வின் ஆவசியம்பற்றி பிரசாரம் செய்யப்பட்டது. ஏராளமான தாய்மார்களும் குழந்தைகளும் பங்குபற்றினர். (ந. நி.)

# சீவனும் சிவனும்

உலகத்தில் உயிருள்ள பொருளும் உயிர் இல்லாத பொருளும் என்று இரண்டு வகை உண்டு. உயிர் உள்ளவைக்கு உடல் உண்டு - உடல்கள் பூதங்களினுல் ஆக்கப்பட்டவை. இவைக்கு பசி தாகம் காமம் முதலிய தாபங்களுண்டு. ஆனுல் மேற்பிறவிகளுக்கு மனம் உண்டு. மனத்தினுல் யோசனை செய்யும் வல்லமை உண்டு. அதுவும் மனுஷனுக்கு விசேஷமானது. அதனுல்தான் மனுஷன் என்று அழைக்கப்படுகிருன். ஆனுல் உடல் எப்படிக் காரியப்படுகிறது என்று யோசிக்கும்போது பற்பல விதமான கொள்கைகள் ஏற்படுகின்றன, இது இயற்கையின் குணம் என்பார்கள் சிலர். மறுபேர் இது ஆண்டவனுடைய ஆணை என்பார்கள். இதற்குத் தக்க சான்றுகள் உண்டு. உடலைச் சீவனே கொண்டு நடத்துவது என்பர் ஆன்மவாதிகள். ஆன்மாவென்று ஒன்றில் உப பரமாத்மாவும் இல்லை என்பது தேரோவாத பௌத்தம் ஆனல் ஒவ்வொருவரும் நிர்வாணம் அடைவார்கள் என்பது அவரின் தீவிரகொள்கை, நிர்வாணம் செயற்கையாலாவது சிருஷ்டியால் ஆவது உண்டுபண்ணப்பட்டதல்ல, அது அப்படியே உள்ளது. பகவத்கீதையில் பிரம நிர்வாணம் பிரமஸபரிசத்தல் பிரம பூதமாகி ஆன்மா அடைகிறது என்பதைக் காண்கிரேம். சைவசித்தாந்தத்தில் பதி (சிவன்) பசு (ஆன்மா) பாசம் (மலம்) என மூன்று பொருள்ளுண்டு — சிவனின் அருளைப்பெற்று பாசம் அகல மலம் நீங்கி, பசுவாகிய ஆன்மா தன்னுடைய பசுத்துவத்தை இழந்து பதியாகிய சிவத்துடன் இரண்டறக் கலப்பதே முத்தி எனப்படும்.

இதனுல் சிவன் அருளை நாடுவதே ஆன்ம ஈடேற்றத்திற்கு இன்றியமையாதது. ஆன்மாவிற்கு ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களுண்டு - முறையே சகலர், பிரளயாகலர் விஞ்ஞானகலர் என ஆன்மாக்கள் வகுக்கப்பட்டு - மலம் நீங்கிய பின் ஜீவன்முத்தர் எனப்படுவார் சிவயோக சாதனை முத்திக்கு வழிகோலும்.

— சௌரிராயன் —

# புலாலுண்ணுமை

புலாலுண்ணுமை என்பது மாமிசம் புசியாமை என்பதாகும். மக்களாகப்பிறந்த நாம் உயிர்களை வதை செய்து வரும் மாமிசத்தைப் புசிக்கக் கூடாது, புலாலுண்ணல் மக்களின் சீரிய பண்பட்ட நல் வாழ்வுக்கு இடையூருனது. இவ்வுண்மையைச் சமயமெனும் ஒழுக்கத்தின் வாயிலாக ஆணித்தரமாக அறிவுறுத்துவது எங்கள் சைவ சமயம் ஒன்றேயாகும். தன்னுயிர்போல் மன்னுயிரையும் நேசிக்கில் புலாலுண்ணுமையை எல்லோரும் மேற்கொள்ள வேண்டும். புலாலுண்ணல் பஞ்சமாபாதகங்கட்கு அத்திவாரமாய் உள்ளது ஞானவிருத்திக்கு அதிகம் இடையூருய் உள்ளது. மக்கள் உடலுள் வேறுபாடு உட்கொள்ளும் உணவைப் பொறுத்தது. இத்தத்துவ உண்மையை ஊடுருவி உணர்தே நம் இந்துமதப் ஒழுக்கமெனும் விழுப்பந் தரும் பண்புக்குப் புலாலுண்ணல் பாதகம் என்று விதந்தோதி விலக்கியது. புலாலுணவைப் பொறுத்து மக்களுடம்பு வாழும்படியாக இயற்கை மக்களைச் சிருஷ்டிக்கவில்லை என்பது விஞ்ஞானம், மெஞ்ஞானம் எனும் இரண்டும் கண்ட உண்மை. தனது உடலை வளர்க்கும் பொருட்டுத் தீங்கற்ற மிருகங்களின் இறைச்சியைத் தின்னும் ஒருவனிலும் பார்க்க இரக்கமற்றவனும் தன்னலங் கருதியுமாயுள்ளவன் வேறு யார் இருக்கிருன்.

"சிறந்த ஞாபக சக்தியையும் பூரண ஆயுளையும், அழகையும், தேக பலத்தையும், மனோபலத்தையும் பெற விரும்புவோர் மாமிச உணவைத் தவிர்த்தல் வேண்டும்." என்கின்றது மகாபாரதம்.

ஆகவே மக்கள் எல்லோரும் புலாலுண்ணலைக் கட்டாயமாகத் தவிர்க்க வேண்டும் அதிலும் சிறுவர்கள் இளமையிலிருந்தே நீக்கிப் பழகவேண்டும். இது எல்லாவற்றிலும் மேலான தர்மம். இது இந்து மதத்தின் சிறந்த கோட்பாடாகும்.

"கொல்லான் புலாலை
மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்,"

செல்வி. த. அரிபிரசாதம்,
கீழ்கரவை

**மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ் செய்வாரிற் றலை.**

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 8-6-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நா. [illegible]ப்பிரகாசம்

இழந்த பலத்தைத் திரும்பக் கொடுக்கிறது!

**பலவிருத்திக் குளிகை**

இது ஆச்சரியமான குணம் உடையது

அசதி, பலவீனம், உடல்மெலிவு, நரம்புதளர்ச்சி, மறதி தாது பலவீனம் முதலியவைகளை நீக்கி புதிய இரத்தத்தை நரம்புகளுக்குள் புகுத்தி இழந்துபோன பலத்தையும் வலிமையையும் மீட்டிக் கொடுத்து வாழ்க்கையை வளம்பெறச் செய்விக்கிறது. 120 குளிகை புட்டி 1 க்கு ரூ. 12-00,

**மூல வியாதிக்கு**

நாக பஸ்பம், கருணை லேகியம் சாப்பிடுங்கள்
ஆப்ரேஷன் அவசியமில்லை. முளை தானே கரைந்துவிடும்.

சீழ் மூலம், இரத்தமூலம், மலபந்தம், குத்தல் கடுப்பு முதலிய 9-வித மூல வியாதிகளும் குணமாகிறது.

பஸ்பமும், லேகியமும் 24 நாள் செட் விலை ரூ. 20-00

**மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S.I.**

# சிவசம்பந்தமும் திருவுருவங்களும்

முற்றேடர்—2.

"லிங்கம் தத்பதமாக்யாத
மங்கம்த்வம்பத மீரிதம்
ஸம்யோகோஸிபதப்ரோக்
தமநயோங்க லிங்கயோ"
—வாதுளாகமம்.

தத், துவ, அஸி, பதமஹாவாக்யத்தின் மூன்று பதங்களும் அது என்ற சிவமாகிய லிங்கம், நீ என்ற ஜீவாத்மாவாகிய அங்கம், ஸம்பந்தம என்ற சிவாத்துவிதமாகிய ஐக்யம் ஆகிய மஹாவாக்யம் சிவசம்பந்தத்தைச சொல்லுகின்றது.

"அங்கம் நம: பதமிதம்
யிவ ஏக்ஷலிங்கம்
ஸம்பந்தம் ஆயபதமேவ
தயோரபேதம்
லிங்காங்க ஸங்கம
பதத்ரய போதனர்த்தம்
பஞ்சாட்சரோயமபிதாஸயதி
மந்திரராஜம்".
—வாதுளாகமம்.

நமபதம், அங்கம் (நமஸ்கரிக்கும் ஜீவன்); சிவபதம் - லிங்கம்; ஆயபதம் சம்பந்தம் ஆகிய பஞ்சாட்சர மந்திரம் சிவசம்பந்தத்தைப் போதிக்கின்றன.

### சட் தல சிவசம்பந்தம்

பத்தத்தலம் மூலாதாரத்திலும், நாசிகாங்கத்திலும் ஆசார லிங்க சம்பந்தத்தையும், மகேஹசத்தலம் சுவாதிட்டானத்திலும், நாக்காங்கத்திலும், குருலிங்க சம்பந்தத்தையும் பிரசாதத்தலம் தொப்பினிலும், கண்ணுங்கத்திலும் சிவலிங்க சம்பந்தத்தையும் பிராணலிங்கித் தலம். அநாகதத்திலும், ஜங்கமலிங்க சம்பந்தத்தையும் சரணத்தலம் கண்டத்திலும், காதிலும், பிரசாதலிங்க சம்பந்தத்தையும் ஐக்கியத்தலம் புருவநடுவிலும் இருதயத்திலும், மஹாலிங்க சம்பந்தத்தையும் கொண்டிருக்கின்றன என்று வாதுளாகமம் கூறுகின்றது.

கூறும் நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீ" என ஞானேந்திரிய கர்மேந்திரிய அங்கங்களிலும் சிவசம்பந்தமிருப்பதைத் திருவாசகம் கூறுகின்றது.

"ஸர்வமிதம் லிங்கமயம்" இந்த உலகமெல்லாம் சிவமயம் என்று கருதி கூறுகின்றது.

"எல்லா உலகமும் ஆனுய் நீயே" இந்த உலகமெல்லாம் சிவமடம்.

"ஓசை ஒலியெலாம் ஆனுய் நீயே" என்று தேவாரம் கூறுகின்றது,

"சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்" (சீவன்) ஒருவ என்பது திருவாசகம்.

"தன் மேனி சிவலிங்கமாய் நின்றிடும்", "மானுடராக்கை வடிவு சிவலிங்கம்" நமது தேகமும் இலிங்க ரூபம் என்று திருமந்திரம் கூறுகின்றது.

"நாதோலிங்கமிதிஜ்ஞேயம் பிந்துபீடமுதாகிருதம, பிந்து நாதயுதம் ரூபம் லிங்காகாரமிதிஸ்மிருதம், லிங்கம் சிவ இதிஜ்ஞேயம் பீடம் சக்திருதாகிரும்" என்று இலிங்கோநிடதம் சொல்லுகின்றது

சிவ. ஐயம்பிள்ளைக்குருக்கள்,
கீரிமலை

—தொடரும்.

### இ. போ. ச. இயங்கிப் போகுந்தானு?



**பெரியவர்:-**
விசை வண்டிகளைக் கவனமாகச் செலுத்தும்படி சாரதிகளுக்கு இ. போ. ச. அதிகாரி கட்டளையிட்டிருக்கிருராமே!

**விகடன்:-**
வீதியில் வெளிவரத்தக்க விசை வண்டிகள் இருந்தாலல்லவோ கவனமாகச் செலுத்துங் கதைபேசமுடியும்.

### அருணுசலம் இன்று வருகிருர்

சென்றவாரம் வருவதற்கிருந்து தவிர்கமுடியாத காரணங்களால் வரவை நிறுத்திக்கொண்ட தென்னிந்திய [illegible]ஸ்வரமேதை காருக்குறிச்[illegible]ஞசலம்பிள்ளை அவர்கள இன்று இங்குவந்துசேருவார்.

அராலி ஆவரசம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இவரது நாதஸ்வரக்கச்சேரி இன்று நடைபெறும்.